To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App

# 18 செப்டம்பர் 2023 நடப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| **TracKD மொபைல் செயலி குற்றவாளிகளின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதை எளிதாக்குகிறது.**  | செய்தி: தமிழ்நாடு காவல்துறை குற்றவாளிகளை அடையாளம் கண்டு கண்காணிப்பதற்கான ஒருங்கிணைந்த தரவு மேலாண்மை முறையான “**TracKD**” என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.<br><br>முக்கிய குறிப்புகள்:<br>• அனைத்து காவல் நிலையங்களிலும் சுமார் 30 ஆயிரம் குற்றப் பதிவுகள் கூடுதல் தகவல்களுடன் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.<br><br>• சென்னை காவல் துறையில் உள்ள குற்றவாளிகளின் 3500க்கும் மேற்பட்ட விவரங்கள் கணினியில் சேர்க்கப்பட்டன.<br><br>• குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் முந்தைய வழக்குகளை சரிபார்க்கவும், மாதந்தோறும் மற்றும் தினசரி அடிப்படையில் அந்த நபர்களின் நிகழ்நேர கண்காணிப்பை உறுதி செய்யவும் இந்த செயலி உதவியாக உள்ளது மேலும் இந்த டிஜிட்டல் குற்றப் பதிவுகள் அந்தந்த எல்லையில் உள்ள காவல் துறை அதிகாரிகளுக்கு உதவுகின்றன.<br><br>• சமீபத்தில் டெல்லியில் உள்ள தேசிய குற்ற ஆவணப்காப்பகம் (NCRB) நடத்திய நான்காவது குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு கூட்டமைவு அமைப்பு (CCTNS) நிரலாக்கப் போட்டி மற்றும் சைபர் சவால் 2023 இல் "மாநிலங்கள்/ஒன்றிய பிரதேசங்கள் காவல்துறையினருடன் கிடைக்கும் தொழில்நுட்ப பயன்பாட்டின் ஒப்பீட்டு மதிப்பீடு" என்ற பிரிவின் கீழ் இந்த செயலி மூன்றாவது பரிசைப் பெற்றது . |

| | |
|---|---|
| பஞ்சாயத்து செயலாளர்களை பணியமர்த்தும் நடைமுறையை தமிழக அரசு திருத்தியமைத்துள்ளது. | செய்தி:ஊரக வளர்ச்சி துறையின் கிராம பஞ்சாயத்து செயலாளர்களுக்கான நடைமுறையை தமிழக அரசு திருத்தியுள்ளது.<br><br>• தமிழ்நாடு கிராம பஞ்சாயத்து செயலாளர்கள் (சேவை நிபந்தனை) விதிகள், 2023-ன் படி, இந்த பதவிகளுக்கு நேரடி ஆட்சேர்ப்பு மூலம் நியமனம் செய்யப்படும்..<br><br>• மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட  குழு மூலம் ஆட்சேர்ப்பு நடத்தப்படும்.<br><br>• விண்ணப்பதாரர்களுக்கான தேர்வு முறை மற்றும் வயது வரம்பை தமிழக அரசு திருத்தியமைத்துள்ளது.<br><br>• அதிகபட்ச வயது வரம்பு 32 ஆகும் மற்றும் குறிப்பிட்ட பிரிவினருக்கு  வயது வரம்பு 34 மேலும்  மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பில் 10 ஆண்டுகள் தளர்வு அளிக்கப்படும்.. |
| அக்டோபர் மாதம் சேலம் விமான நிலையத்தில் இருந்து விமான சேவைகள் மீண்டும் தொடங்கப்படும்<br><br> | செய்தி:அக்டோபர் மாதம் சேலம் விமான நிலையத்தில் இருந்து விமான சேவைகள் மீண்டும் தொடங்கும். சேலம் வழியாக இரண்டு விமானங்கள் இயக்கப்படும்.<br><br>•விமான நிலையம் 136 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.<br><br>முக்கிய குறிப்புகள்:<br><br>• சேலம் விமான நிலையம் தமிழ்நாட்டில் ஆறாவது பரபரப்பான விமான நிலையமாகும்.<br><br>• சேலம் விமான நிலையம் 1993 ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கட்டப்பட்டது. |

| | |
|---|---|
| | • ஓடுபாதை நீளத்தின் அடிப்படையில் இது தமிழ்நாட்டின் ஐந்தாவது பெரிய விமான நிலையமாகும்<br>• தமிழ்நாட்டில் மொத்தம் 6 விமான நிலையங்கள் உள்ளன.<br>• அவை:<br>  ◦ சென்னை சர்வதேச விமான நிலையம்<br>  ◦ கோவை சர்வதேச விமான நிலையம்<br>  ◦ மதுரை சர்வதேச விமான நிலையம்<br>  ◦ திருச்சிராப்பள்ளி சர்வதேச விமான நிலையம்<br>  ◦ தூத்துக்குடி விமான நிலையம்<br>  ◦ சேலம் விமான நிலையம் |
| குறத்தியரை குடைவரை கோயில் | செய்தி: பாண்டிய காலத்து குறத்தியரை குடைவரை கோயில் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாக அறிவிக்கப்படும்<br>• பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களாக அறிவிக்கப்படும் பத்து பாண்டிய கால கோயில்களில் இந்த கோயில் ஒன்றாகும் என்று தொல்பொருள் அமைச்சர் அறிவித்தார்.<br>முக்கிய குறிப்புகள்:<br>• இந்த குடைவரை கோயில் 5 அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்டது<br>• பாறையில் செதுக்கப்பட்ட சிலை உண்மையில் விஷ்ணு என்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் மற்றும் கவிஞர் ஆன கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எழுதியுள்ளார். ஆனால் அங்கு வசிக்கும் மக்கள் அச்சிலையை அவ்வையார் அம்மன் என்று வணங்குகிறார்கள். |
| | |

| | |
|---|---|
| இலங்கைத் தமிழர்களுக்கு இலவச வீடுகள் ஒதுக்கீடு.<br> | செய்தி:1591 இலங்கைத் தமிழர் அகதிகளுக்கு இலவச வீடுகள் வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் காணொலி காட்சி முறையில் தொடங்கி வைத்தார்<br>.<br>• முதல் கட்டமாக வேலூர் மாவட்டம் உள்ள மேல்மொணவூரில் இந்த இலவச வீட்டுமனை திட்டம் ஆரம்பிக்க உள்ளது .<br><br>முக்கிய குறிப்புகள்:<br>• தமிழகத்தின் 29 மாவட்டங்களில் உள்ள 104 மறுவாழ்வு முகாம்களில் 19,498 இலங்கை தமிழ் குடும்பங்கள் வசித்து வருகின்றன.<br>• இந்தத் திட்டத்தின் கீழ் 342 கோடி ரூபாய் செலவில் 7,469 வீடுகள் மூன்று கட்டங்களாக மாவட்ட ஊரக மேம்பாட்டு ஆணையத்தால் கட்டப்பட்டு வருகின்றன.<br>• முதற்கட்டமாக ரூ.176 கோடி செலவில் 3,510 வீடுகள் கட்டப்பட்டு 2021 நவம்பரில் வேலூரில் தொடங்கப்பட்டது.<br>• மாநிலத்தின் 20 மாவட்டங்களை உள்ளடக்கிய 35 முகாம்களில் பயனாளிகள் வசித்து வருகின்றனர்.<br>• தற்போது 13 மாவட்டங்களில் உள்ள 19 முகாம்களில் 79.70 கோடி ரூபாய் செலவில் 1,591 வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. |

பதிப்புரிமை © ***Adda247***

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் *Adda247* இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.